www.tamilarangam.net

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பிரேமா புலிகள் பேச்சை முறிக்க நெருக்கடி

இந்தியாவில் 'போர்பஸ்' ஊழல் ராஜீவ் காந்தியை மிரட்டிக் கொண்டிருந்தது. 'இந்து' பத்திரிகை 'போர்பஸ்' ஊழல்களை புலனாய்வு செய்து அக்கு வேறு ஆணி வேறாக அம்பலப்படுத்தியது.

பொதுத் தேர்தல் வந்தால் இந்திரா காங்கிரஸ் ஆட்சி தோற்பது நிச்சயம் என்றாகியது.

'மிஸ்டர் கிளீன்' என்று போற்றப்பட்ட ராஜீவ் காந்தியை 'ஊழல் மன்னராக' பத்திரிகைகள் கூறத்தொடங்கிவிட்டன.

நிதானம் இழந்த ராஜீவ்காந்தி மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் அவரது பெயரை மேலும் கெடுக்கவே உதவின.

ராஜீவின் இளம் பிரதமர் என்ற கவர்ச்சியும், ஆளுமையும் காணாமல் போயின.

ராஜீவ் காந்தியின் முக்கிய சகாக்களில் ஒருவராக இருந்து, அவரை விட்டும், அமைச்சர் பதவியைவிட்டும் வெளியேறிய வி.பி.சிங்குக்கு எதிர்பாராத திருப்பம் காத்தி ருந்தது.

கறைபடாத கரத்திற்கு சொந்தக்காரர், நேர்மைக்காகப் போராடுபவர், அடுத்த பிரதமர் என்றெல்லாம் பத்திரிகைகள் புகழத் தொடங்கின. இந்தியாவின் முக்கிய கட்சிகள் காங்கிரசுக்கு எதிராக ஒன்று பட்டன.

இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஒன்று பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் காங்கிரஸ் தோற்பது வழக்கம்தான்.

ஆனால், போர் பஸ் ஊழல், இலங்கையில் இந்தியப் படையை இறக்கி மூக்குடைபட்டது ஆகியவை உட்பட ஏராளமான கெட்ட பெயர்களை மூட்டை மூட்டையாக சுமந்தார் ராஜீவ் காந்தி.

ராஜீவ் காந்தி தோற்கப்போகும் செய்தியைக் கேட்க இலங்கை மக்களும் ஆவலோடு காத்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்களால் மட்டுமன்றி சிங்கள மக்களாலும் இந்தியப் படை வெளியேற்றம் விரும்பப்பட்டது.

ரா்ஜீவ் தோல்வி கண்டால் இந்தியப் படை வெளியேறும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்று.

இலங்கையில் நின்ற இந்தியப் படையினருக்கும் தாங்கள் ஒட்டுமொத்தமாக வெளியேற வேண்டி இருக்கும் என்பது தெரிந்துவிட்டது. பல சிப்பாய்கள் கிடைக்கக் கூடிய வெளிநாட்டு பொருட்களையெல்லாம் வாங்கி மூட்டை கட்டி வைத்து விட்டனர்.

எதிர்பார்த்திருந்த அந்தநாளும் வந்தது. தங்கள் இளம் பிரதமர் ராஜீவ் காந்தியை பதவியில் இருந்து இறங்குமாறு தீர்ப்பளித்தனர் இந்திய மக்கள்.

விமானப் படிக்கட்டில் இருந்து கையசைத்தவாறு ராஜீவ் காந்தி துள்ளித் துள்ளி இறங்கும் படம் ஒன்றை, ராஜீவின் தோல்விக்கு அடையாளமாக காண்பித்தது இந்திய தொலைக்காட்சி.

வி.பி.சிங்கின் ஜனதா தளத்துடன் தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டது.

தி.மு.க.தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதி தன்னைச் சந்தித்த புலிகள் இயக்கப் பிரமுகர்களிடம் "இந்தியப்படை திரும்பிவரும், புதிய ஆட்சி வந்த உடன் அந்தப் பணி நடக்கும்" என்று உத்தரவாதம் கொடுத்திருந்தார்.

## கலைஞர் கோபம்

வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாள் கலைஞர் கருணாநிதியை சந்தித்தாலும்கூட, கருணாநிதியைப் பற்றிய எதிர் விமர்சனங்களும் செய்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருடன் ஆரம்பகாலத்தில் இருந்தே கருணாநிதிக்கு எட்டாப் பொருத்தம்.

ரெலோவுடனும் எம்.ஜி.ஆர் மறைவின் பின்னர் புலிகளுடனும்தான் கருணாநிதிக்கு நெருக்கம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் தமிழ் நாட்டில் இருந்த புரட்சிகர இயக்கங்களான 'மக்கள் யுத்தக் குழு' போன்றவற்றுடனேயே தொடர்புகளை வைத்திருந்தனர்.

இந்திய அரசோ, அல்லது தமிழ்நாட்டில் தி.மு.க.போன்ற கட்சிகளோ பிற்போக்கானவை. இவற்றைப் பயன்படுத்தலாமே தவிர, நம்பக்கூடாது என்பதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் ஆரம்பகால கொள்கையாக இருந்தது.

அதனால் கருணாநிதி, எம்.ஜி.ஆர். போன்றோருடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பிற்கு அதிக ஒட்டுதல் இருக்கவில்லை.

பிரேமதாசாவுடன் மாத்தையா ① யோகி ②, அன்ரன் பாலசிங்கம் ③, அடேல் ④, அமைச்சர் ஏ.சி.எம். ஹமீட். முறியும் கட்டம்.



ஈ.பி.ஆர்.எல்.எஃப். கம்யூனிஸ்ட் இயக்கமா? என்று தன் உதவியாளரான செம்பியன் என்பவரிடம் கருணாநிதி விசாரித்தும் இருந்தார்.

அவ்வாறு ஆரம்பகாலம் முதல் இருந்த கசப்புணர்வு 1989ல் வெளிப்பட்டது. வரதராஜப் பொருமாள் கொடுத்த பேட்டிகள் அதனை மேலும் தூண்டிவிட்டன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆட்சியை புலிகளிடம் கையளித்தால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களின் உயிர்களுக்கு ஊறு நேராமல் தாம் பார்த்துக்கொள்வதாக கலைஞர் சிலரிடம் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

## புதிய ஆட்சி

இந்திய மத்திய அரசில் வி.பி.சிங் தலைமையிலான புதிய ஆட்சி பொறுப் பேற்றது. பிரதமராக வி.பி.சிங் பதவியேற்றார்.

தி.மு.க.வின் முக்கிய தலைவரும், கருணாநிதியின் மருமகனுமான முரசொலி மாறனுக்கும் மத்திய அமைச்சர் பதவி கிடைத்தது. வெளியுறவுத் துறை அமைச்சராக ஐ.கே.குஜ்ரால் பதவி ஏற்றார். இவர்தான் சமீபகாலம்வரை இந்தியப் பிரதமராக பதவிவகித்தவர்.

இந்தியப் படைகளை விரைவாக திருப்பி அழைக்கும் பணிகள் ஆரம்பமாகின.

## எதிர்ப்பும் காரணமும்

தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் புலிகளுக்கு அதிக இடம் தரப்படுகிறது என்று 'துக்ளக்' சோ போன்றோரும் காங்கிரஸ் கட்சியினரும் குற்றம் சாட்டி வந்தனர்.

துக்ளக் 'சோ' சிறந்த அரசியல் விமர்சகர் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது.

ஆனால், 'தமிழ்', 'தமிழ் உணர்வு', 'தமிழ் உரிமை' போன்ற வார்த்தைகளைக் கேட்டாலே அவருக்குப் பிடிப்பதில்லை.

பிறப்பாலே 'சோ பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பவை பிராமணர்களை பார்ப்பானியர்கள், ஆரியர்கள் என்றே கூறிவந்தன.

பாம்பையும், பாப்பானியனையும் கண்டால் முதலில் பார்பானியனை அடி, பின்னர் பாம்பை அடி என்று திராவிடர் கழகத்தினர் பிரசாரம் செய்த காலமும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் முக்கிய அரச உத்தியோகங்கள் முதற்கொண்டு சகலதுறைகளிலும் ஆதிக்கம் வகிப்பவர்களாகவும், பணம் படைத்தவர்களாகவும் பார்பானியர்களே இருந்தனர். பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் முதலாளிகளாகவும் அவர்களே இருந்தனர்.

திராவிடர் கழகத்தின் எழுச்சியும், தி.மு.க. ஆட்சியும் பார்பானிய ஆதிக்கத்தை கணிசமான அளவு குறைத்தது.

இவற்றின் காரணமாக திராவிடக் கட்சிகள்மீதும், தமிழ் உணர்வு பற்றிப் பேசுகிறவர்கள் மீதும் தமிழகப் பார்ப்பானியர்களுக்கு இயல்பாகவே ஒரு வெறுப்பு இருந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் புலிகளை எதிர்ப்பதாகவும், தமிழ் பிரச்சனைக்கு தீர்வு காண்பதை எதிர்க்கவில்லை என்றும் இன்று 'சோ' கூறுகிறார்.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைதி வழியில் உரிமை கேட்டுப் போராடிய காலம் முதல் இலங்கைத் தமிழர்களது அபிலாசைகளுக்கு எதிரான கருத்துக்களையே துக்ளக் போன்ற ஏடுகள் வெளியிட்டு வந்தன.

குமுதம், ஆனந்த விகடன், ஜுனியர் விகடன் போன்ற பத்திரிகைகள் இலங்கையில் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்று, அதற்கான ஆதரவு தமிழக மக்களிடம் பெருகிய பின்னரே ஈழப் போராளிகள் பற்றிய செய்திகளை வெளியிட ஆரம்பித்தன.

'தினமலர்' போன்ற பத்திரிகைகள் தொடர்ந்து ஈழக் கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்தன.

எனவே, ராஜீவ் கொலை விவகாரத்தின் பின்னர்தான் 'துக்ளக் சோ' போன்றோர் தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டனர் என்பது சரியல்ல.

இந்தியப் படையினரின் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளை இந்தியாவின் பல பத்திரிகைகள் அம்பலப்படுத்தியபோது, அப்படி நடத்திருக்கவே மாட்டாது என்று 'சோ' கூறியிருந்தார்.

"தமிழகத்தில் புலிகளின் முகாம்கள் எதுவும் கிடையாது. காங்கிரஸ் ஆட்சியிலேதான் தமிழ்நாட்டில் புலிகள் உட்பட போராளிக் குழுக்களுக்கு பயிற்சி முகாம்கள் இருந்தன" என்று புத்திசாலித்தனமாக பதில் கொடுத்தார் கலைஞர்.

புலிகளே இல்லை என்று கூறவில்லை, புலிகளின் பயிற்சி முகாம்கள் இல்லை என்றுதான் கலைஞர் கூறியிருந்தார்.

## வை.கோ

கலைஞர் கருணாநிதியை புலிகள் அடிக்கடி சந்தித்தனர். வை.கோபால்சாமி புலிகளின் பாசத்துக்குரியவராக இருந்தார்.

கருணாநிதி புலிகளை ஆதரித்ததுக்கு பல அரசியற் காரணங்கள் இருந்தன. உள்நாட்டில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதுதான் கலைஞரின் முக்கிய நோக்கம்.

ஆனால், வை.கோபால்சாமியும் தி.மு.க.வின் தன்னலமற்ற பல்லாயிரம் தொண்டர்களும் எவ்வித சுயநலமும் இல்லாமல் ஈழத் தமிழர்களுக்கு உதவும் துடிப்போடு இருந்தனர்.

வை.கோ. புலிகள் மட்டும்தான் உண்மையாகப் போராடுகிறார்கள் என்று உறுதியாக நம்பினார். வேறு சில தமிழ் இயக்கங்கள் அவரைச் சந்திக்க முற்பட்ட போது, சந்திக்க மறுத்தவர் வை.கோ.

புலிகளுக்கும் வை.கோவுக்கும் இடையிலான தொடர்பை வைத்து அவரது அரசியல் வாழ்க்கையையே முடித்துவிட திட்டமிட்டனர் அவரது அரசியல் எதிரிகள்.

அப்படியிருந்தும் சிறிதும் கலங்காமல் நின்று, 'இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தமிழீழமே ஒரே தீர்வு' என்று சமீபத்திய தேர்தலில்கூட வை.கோபால்சாமி கூறியது குறிப்பிடத்தக்கது.

வை.கோ.ஜெயலலிதாவோடு சேர்ந்ததையும், அவருடன் நிற்பதையும் வைத்து சந்தர்ப்பவாதி என்று கூறுகிறவர்களும் இருக்கலாம்.

ஜெயலலிதாவோடு சேர்ந்து நின்றிருக்காவிட்டால் வை.கோ.வை தமது பண பலம், அதிகார பலம் என்பவற்றால் அவ ரது எதிரிகள் முகவரி இல்லாமல் செய்திருப்பர்.

யாரோடு நிற்கிறார் என்பதைவிட, அப்படி நின்று என்ன செய்கிறார், எவ்வாறு செயற்படுகிறார்? என்று கவனித்தே சில சமயங்களில் விமர்சனம் செய்ய வேண்டும். வை.கோ.வுக்கு அது பொருந்தும்.

## சர்வகட்சி மாநாடு

இந்தியப் படைகளின் வெளியேற்றம் நடந்து கொண்டிருக்கையில் பிரேமதாசாவின் மூளையில் தோன்றியது ஒரு புதிய யோசனை.

அதுதான் 'சர்வகட்சி மாநாடு' நடத்தும் யோசனை.

'பாராளுமன்ற தெரிவுக்குழு', சர்வ கட்சி மாநாடு' என்று பல்வேறு இழுத்தடிப்பு தந்திரங்களின் பிதாமகர் பிரேமதாசாதான்.

"வடக்கு-கிழக்கை பிரித்தே தீர வேண்டும், இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் கூறியுள்ளபடி கிழக்கில் சர்வசன வாக் கெடுப்பை உடன் நடத்த வேண்டும்" என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் கோரினார்கள்.

இந்தியப் படையை வெளியேறச் செய்வதால் பிரேமதாசாவுக்கு கிடைக்கக் கூடிய நல்ல பெயரை கெடுப்பதற்காகவே சுதந்திரக் கட்சி அப்படி அவசரப் படுத்தியது.

பிரிப்புக்கும், சர்வசன வாக்கெடுப்புக்கும் புலிகள் இணங்கமாட்டார்கள். எனவே, தாம் ஒரு நெருக்கடியை கொடுத்தால் அரசு, புலிகள் பேச்சு முறியும் என்று ஆவலோடு எதிர்பார்த்தனர் சுதந்திரக் கட்சியினர்.


அது மட்டுமல்ல, பிரேமதாசா புலிகளுடன் உடன்பாடு ஒன்றைக் கண்டு, நிரந்தர தீர்வைக் கண்டுவிட்டால் குறைந்தது 20 வருடத்திற்கு அவரை ஆட்சியில் இருந்து அசைக்க முடியாது என்பதையும் அவர்கள் அறிவர்.

(தொடர்ந்து வரும்)

படம்①- புலிகளின் மூத்த தளபதிகள் பொட்டம்மான்①, கருணா② ஆகியோர் கிளிநொச்சி தாக்குதல் தொடர்பான தாக்குதல் திட்டத்தை பார்வையிடுகின்றனர். பொட்டம்மான் அருகில் கரும்புலிகள் இருவர்.

படம் ②- கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள கருணாநிலையத்தில் ரோந்து செல்லும் புலிகளின் அணி. தற்போது கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை புலிகளின் அணிகள் நிலைகொண்டுள்ளன.

படம்③- புலிக் கொடியுடன் கிளிநொச்சி நகரில் வலம்.


படம் ①



படம் 2


படம் ③



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்